## பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல்

- அனர்த்த முகாமைத்துவத்தை பாடசாலை பாடத்திட்டத்துடன் இணைத்தல்.
- பாடசாலை மாணவர்களுக்கான பல்வேறுபட்ட அனர்த்தங்கள் தொடர்பான கையேடுகளை அச்சிட்டு வழங்கல்.
- அரச திணைக்களங்கள், நிறுவனங்களுக்கான தொடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல்.
- பல்வேறுபட்ட அனர்த்தங்களினால் உயிரழந்தவர்களை நினைவுகூறும் முகமாக வருடாந்தம் தேசிய பாதுகாப்பு தினத்தை அனுஷ்டித்தல் மற்றும் இலங்கையரிடையே பாதுகாப்பானதொரு கலாச்சாரத்தை கட்டியெழுப்புதல்.
- அனர்த்த முகாமைத்துவ நிலைய வளங்கல் பிரிவிற்கு ஒலி, ஒளி சாதன தகவல் அமைப்புக்களை ஏற்படுத்தல்.
- அனர்த்த முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரையும், செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் தேசிய மட்டத்திலான கண்காணிப்பாளர்களாக தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைத்தல் குழுவை ஸ்தாபித்தல்.

## அபாய முன் மதிப்பீடு

- தேசிய மற்றும் சர்வதேச தொழில்நுட்ப நிறுவனங் களுடனான இணைப்பின் ஊடாக தொடர்ச்சியாக அனர்த்தம் பற்றிய தகவல்களைப் பெறுதல்.
- திடீர் அனர்த்தங்களின்போது சமுதாயத்தினரை அப்புறப் படுத்துவதற்குத் தேவையான அபாய முன்னெச்சரிக்கைச் செய்திகளை மூன்று மொழிகளிலும் பரப்புதல்.
- அபாய முன்மதிப்பீட்டு முறைமைகளை வழங்குவதற்காக 77 முன்னெச்சரிக்கை கோபுரங்கள், ரேடியோ தொலைத் தொடர்பு, கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் ஊடகம் மற்றும் பாரம்பரிய முறைகளை பயன்படுத்தல்.

## திடீர் அனர்த்த நடவடிக்கைகள்

- வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணிநேரமும் செயற்படுகின்ற (24x7) அவசர நடவடிக்கைக் கூடத்தின் மூலம் தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் முப்படை, பொலீஸ் மற்றும் ஏனைய தரப்பு நிறுவனங்களுடன் இணைந்து அனர்த்தங்கள் தொடர்பில் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். திடீர் அனர்த்தங்களின்போது அவசர நடவடிக்கைப் பிரிவின் உதவியைப் பெறுவதற்கு 011 - 2670002 தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்.
- மாவட்ட மட்டத்திலும் பாரிய அனர்த்தங்களின்போது அவசர நடவடிக்கை மத்தியஸ்தானம் செயற்படும்.
- பாதிக்கப்பட்ட மக்களை அகற்றுதல், தேடுதல் மற்றும் பாதுகாப்பு, நலன்புரி நிலையங்களை முகாமைத்துவம் செய்தல், வைத்திய மற்றும் சுகாதார சேவைகளை வழங்கல், சமைத்த உணவுகளை பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக கிராமிய மட்டங்களில் குழுக்களை அமைத்தல்.
- பாதிப்புக்குள்ளான சேவைகளை மீளமைக்க உரிய சேவை வழங்குனர் நிறுவனங்களுடன் அவசர நடவடிக்கை மத்தியஸ்தானம் தொடர்புகளை ஏற்படுத்தும்.
- ஊடகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பான செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.



# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

### அனர்த்த முகாமைத்துவ அமைச்சு



**"பாதுகாப்பான இலங்கையை முன்னிட்டு....."**


பணிப்பாளர் நாயகம்,
அனர்த்த முகாமைத்துவ நிலையம்,
வித்தியா மாவத்தை,
கொழும்பு 07.

தொலைபேசி - 011 2136136, 011 2670002
077 3957900
தொலைநகல் - 011 2670079, 011 2670025
மின்னஞ்சல் - info@dmc.gov.lk
இணையத்தளம் - www.dmc.gov.lk
- DMC Srilanka
- DMC - Sri Lanka


**துரித அழைப்பு - 117**

## அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அமைப்பும் செயற்பாடும்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய பேரவையின செயற்பாட்டு நிறுவனமாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது.

- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அனர்த்த பிரதிபலிப்பு திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.
- தேசிய திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவனம் சார்ந்த அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்கு அமைச்சுக்களுக்கு, திணைக்களங்களுக்கு, ஏனைய அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- அனர்த்த முன்னாயத்தம், சேதங்களைக் குறைத்தல், தடுத்தல், நிவாரணம், புனர்நிர்மானம் மற்றும் மீள கட்டுமான திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- இது போன்ற திட்டங்கள், செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல், இது போன்ற செயற்பாடுகளுக்காக திறைசேரியில் நிதிகளைப் பெற்றுக் கொள்ளல், நிதிகளை உரிய பிரதேசங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் கண்காணிப்பும் மீளாய்வும்.
- ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை, நிகழ்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ தகவல்களை பராமரித்தல்.

## அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவன கட்டமைப்பு

பணிப்பாளர் நாயகமே மொத்த நிர்வாக முகாமைத்துவத்திற்கும் பொறுப்புடையவராவர். பிரதி பணிப்பாளர் நாயகம் ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் செயற்பாடுகளுக்கு பொறுப்புடையவராவர். அவசர நடவடிக்கை, முன்னாயத்தம், மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு, அனர்த்த தணிப்பு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி, நிதி மற்றும் மனித வளம் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் பணிப்பாளர் பொறுப்பாக செயற்படுவதுடன், பிரதி பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்கள் இவர்களுக்கு ஒத்துழைப்பாக செயற்படுவார்கள்.

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளதுடன் மாவட்ட செயலாளரின் கண்காணிப்பின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள உதவி பணிப்பாளர் இங்கு செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

## தொலைநோக்கு

"விழிப்புணர்வைப் பெற்ற பாதுகாப்பான சமுதாயங்கள்"














## செயற்பணி

"இயற்கையாகவும் தொழில்நுட்ப ரீதியிலும் மனிதனாலும் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தத்தை முறைசார்ந்த முகாமைத்துவத்தின் ஊடாக சமுதாயங்களுக்கு மத்தியிலும், பொதுவாக நாட்டினுள்ளும் பாதுகாப்பானதொரு கலாசாரத்தை உருவாக்கி அதனை நிலைபேறானதாக்குதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பணியாகும்."

## அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி

- 1974 ஆம் ஆண்டு தொடக்கம் அனர்த்தம் தொடர்பான வரலாற்றுப் பதிவுகள் www.desinventar.lk இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- நிலச்சரிவு, வரட்சி, கடல் அலை, சுனாமி, சூறாவளி, மின்னல், வெள்ளப்பெருக்கு, கடல் அரிப்பு, கடல் மட்டம் உயர்தல் போன்ற தகவல்கள் www.hazard.lk இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- ஆபத்து கூடிய பகுதிகளில் கட்டிய நிர்மானம் தொடர்பான வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்தல்.
- அபிவிருத்தி திட்டமிடல் செயற்பாடுகளில் அனர்த்த குறைப்பு நடைமுறைக்கு நிறுவனங்களுக்கு உதவுதல்.
- அடையாளம் காணப்பட்ட ஆபத்துக்களுக்கான விபர அறிக்கையை தயாரித்தல்.
- அனர்த்த ஆபத்து குறைப்பு தொடர்பான ஆய்வுகள் மற்றும் கற்கை நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

## முன்னாயத்தம் மற்றும் திட்டமிடல் பிரிவு

- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசர அனர்த்த நடவடிக்கை திட்டம் என்பன பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாவட்டங்களுக்குமான அனர்த்த முன்னாயத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- மாகாண சபைகள், மாவட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் தொடர்பில் அனர்த்த முன்னாயத்த நிலை மற்றும் பதில் நடவடிக்கைகள் திட்டமிடும் பொருட்டு வசதிகளை ஏற்பாடு செய்தல், வழிகாட்டல்களை வழங்கல், இணைப்பாக்கம், மேற்பார்வை மற்றும் வழிப்படுத்தல்.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் மாறுபட்ட அனர்த்தங்களுக்கு பிரதிபலிப்பை வழங்கும் வகையில் கிராம மட்ட குழுக்களின் திறனை மேம்படுத்தல்.
- அனர்த்தங்களினால் பாதிக்கப்படக்கூடிய மக்களை வெளியேற்றுவதற்கான பாதுகாப்பான இடங்களை இனங்காணல் மற்றும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வை அதிகரிக்க ஒத்திகை ஒத்திகை பயிற்சிகளை நடாத்தல்.
- அனர்த்த ஆபத்து வலயங்களில் உள்ள உள்ளூர் சபைகளினுடைய வினைத்திறனை அபிவிருத்தி செய்தல்.